# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2080/34 - 2018 ජූලි මස 17 වැනි අඟහරුවාදා - 2018.07.17

*2080/34 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி 7/2001* (III)

**1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

*1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

திலக் மாரப்பண,
வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2018, யூலை 17.*

ஒழுங்குவிதிகள்

**பாகம்** I

பூர்வாங்க ஏற்பாடுகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 2018 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபை (ஈரான் தொடர்பான தடை விதிப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையின் 1737 (2006) மற்றும் 2231 (2015) போன்ற தீர்மானங்களுக்கும் ஈரான் தொடர்பான எவையேனும் அடுத்துப் பின்னரான தீர்மானங்களுக்கும் ஈரான் தொடர்பான முன்னைய தீர்மானங்களை நீக்குகின்ற, மாற்றீடு செய்கின்ற அல்லது திருத்துகின்ற எல்லாத் தீர்மானங்களுக்கும் பயன்கொடுத்து, பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களின் பரம்புதல் தொடர்பான இலக்கு வைக்கப்பட்ட நிதிசார் தடைவிதிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்தை இயலச்செய்வது இவ்வொழுங்குவிதிகளின் குறிக்கோளாகும்.


1A - PG 4125 — 507 (2018/07)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. இவ்வொழுங்குவிதிகள்-

(அ) எங்கேனும் அமைந்துள்ள இலங்கையின் எல்லாப் பிரசைகள் மற்றும் இலங்கையின் சட்டமொன்றின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட, கூட்டிணைக்கப்பட்ட குழுக்கள் ; அத்துடன்

(ஆ) இலங்கையின் கொடியைப் பறக்கவிடும் கலம் ஒன்று ;

(இ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்தி ஒன்று ; அத்துடன்

(ஈ) எங்கேனும் அமைந்துள்ள இலங்கையின் கொடியைப் பறக்கவிடும் கலத்தின்மீது அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வானூர்தியொன்றின் மீது புரியப்பட்ட தவறொன்றிற்கு,

ஏற்புடையதாதல் வேண்டும்.

4. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் இருத்தல் வேண்டும் ; அவர், பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

5. தகுதிவாய்ந்த அதிகாரி மற்றும் நிதிசார் உளவறிதற் கூறு பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் :-

(அ) (இதனகத்துப்பின்னர் "பெயர்குறிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பாதுகாப்புப் பேரவையினால் அல்லது ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையின் 2231 (2015) என்ற தீர்மானத்தைப் பின்பற்றி அல்லது அது தொடர்பான ஏதேனும் அடுத்துப்பின்னரான தீர்மானத்தைப் பின்பற்றி தாபிக்கப்பட்ட அதன் குழுக்களின் எவற்றினாலும் பெயர்குறிக்கப்பட்ட இயற்கை மற்றும் சட்ட ஆட்களினதும் உருவகங்களினதும் பெயர்குறித்தல்கள் மற்றும் இல்லாதொழித்தல்கள் பற்றி நிறுவகங்களுக்கு அறிவித்தல் ; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் நிறுவனங்களின் கடப்பாடுகள் மற்றும் கடமைகள் பற்றி அவற்றிற்கு வழிகாட்டுநெறிகள் மற்றும் பணிப்புக்களை வழங்குதல்.

6. நிறுவனங்களின் மேற்பார்வை அதிகாரிகளின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) அது மேற்பார்வை செய்யும் எல்லா ஆட்கள் மற்றும் உருவகங்களிடையே பரம்புதலுக்கான நிதியளிப்பு அபாய மட்டத்தை கண்காணித்தல் ; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதற்காக அது மேற்பார்வை செய்கின்ற இயற்கை ஆட்கள் மற்றும் உருவகங்களைக் கண்காணித்தல் மற்றும் இந்நோக்கத்துக்காக அபாய அடிப்படையிலான மேற்பார்வைசார் நிகழ்ச்சித் திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ;

(இ) இவ்வொழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கருமங்கள் தொடர்பில் ஆட்கள் மற்றும் உருவகங்களுக்கு வழிகாட்டுநெறிகளை வழங்குதல் ;

(ஈ) இவ்வொழுங்குவிதிகளின் IV ஆம் பாகத்தின் கீழ் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல் ; அத்துடன்

(உ) இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதனை வலுவுறுத்தல்.

7. நிதிசார் உளவறிதற் கூறு மற்றும் நிறுவனங்களின் மேற்பார்வை அதிகாரிகள், இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதனை கண்காணித்தல் வேண்டும் என்பதுடன் வலுவுறுத்தலும் வேண்டும் ; அத்துடன் இவ்வொழுங்குவிதிகளை மீறுவதனைப் புலனாய்வு செய்தலும் வேண்டும்.

## பாகம் II

ஆட்கள் மற்றும் உருவகங்களைப் பெயர் குறித்தல்

8. ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையினால் அல்லது ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையின் 1737 (2006) மற்றும் 2231 (2015) போன்ற தீர்மானங்களைப் பின்பற்றியும் ஈரான் தொடர்பான எவையேனும் அடுத்துப்பின்னரான தீர்மானங்களைப் பின்பற்றியும் ஈரான் தொடர்பான முன்னைய தீர்மானங்களை நீக்குகின்ற, மாற்றீடு செய்கின்ற அல்லது திருத்துகின்ற எல்லாத் தீர்மானங்களையும் பின்பற்றியும் தாபிக்கப்பட்ட ஏதேனும் குழுவினாலான ஆளொருவரின் அல்லது உருவகத்தின் பெயர்குறித்தலொன்று–

(அ) இலங்கையில் உடனடியாக ஏற்புடையதாதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தடைகளை விதிக்கும் உடனடிப் பயனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் III

தடைகள்

9. (1) ஆளொருவர்–

(அ) பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவரினால் அல்லது உருவகத்தினால் ;
(ஆ) பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவரின் அல்லது உருவகத்தின் சார்பில் ; அல்லது
(இ) பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவரின் அல்லது உருவகத்தின் பணிப்பின்பேரில்,

நிதிகள் அல்லது வேறு சொத்துக்கள் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், முழுமையாக அல்லது கூட்டாக சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றன அல்லது வைத்திருக்கப்படுகின்றன என்பது பற்றி அறிந்துகொண்டு அல்லது அதுபற்றி கவனயீனமாக இருந்து கொண்டு நிதிகளை அல்லது வேறு சொத்துக்களைக் கையாளுதலாகாது.

(2) ஆளொருவர்–

(அ) பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவருக்கு அல்லது உருவகத்திற்கு ;

(ஆ) பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவரினால் அல்லது உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட ஆளொருவருக்கு அல்லது உருவகத்திற்கு ;

(இ) பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவர் அல்லது உருவகம் சார்பாக செயலாற்றும் ஆளொருவருக்கு அல்லது உருவகத்திற்கு ;

(ஈ) பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவரின் அல்லது உருவகத்தின் நன்மைக்காக,

நிதிகள், வேறு சொத்துக்கள் அல்லது நிதிசார் சேவைகள் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், முழுமையாக அல்லது கூட்டாக கிடைக்கக்கூடியனவாக ஆக்கப்பட்டுள்ளன என்பது பற்றி அறிந்துகொண்டு அல்லது அதுபற்றி கவனயீனமாக இருந்து கொண்டு அவற்றை கிடைக்கக்கூடியனவாக்குதலாகாது.

10. வரவு வைக்கப்பட்ட நிதிகளும் முடக்கப்பட்டனவாகவிருக்கும்வரை, ஆளொருவர், கணக்கின்மீது வருமதியான வட்டி அல்லது வேறு ஈட்டுகை அல்லது 9 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் முடக்கப்பட்ட கணக்காக வருமுன்னர் செய்து முடிக்கப்பட்ட அல்லது எழுந்த ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் என்பவற்றின் கீழ் வருமதியான கொடுப்பனவுகள் அல்லது மூன்றாந்திறத்தவரொருவரினால் அத்தகைய கணக்குக்கு கைமாற்றப்பட்ட வேறு நிதிகளுடன் முடக்கப்பட்ட கணக்கொன்றிற்கு வரவு வைக்கலாம்.

11. ஒன்பதாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறு முடக்கல் வழிமுறைகளுக்கு அமைந்ததாகவுள்ள நிதிகள் அல்லது வேறு சொத்துக்களை வைத்திருக்கின்ற ஆளொருவர், அவரது அல்லது அதன் நிதிகள் அல்லது வேறு சொத்துக்கள் முடக்கப்படவுள்ளது அல்லது சொத்துக்கள் கிடைக்கக்கூடியனவாக ஆக்கப்படவில்லை என பெயர் குறிக்கப்பட்ட ஆளுக்கு முடக்கல் வழக்குக்கு முன்னர் எச்சந்தர்ப்பத்திலும் அறிவித்தல் வழங்குவதிலிருந்து தடைசெய்யப்படுதலும் வேண்டும்.

12. ஒன்பதாம் மற்றும் 10 ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறும் ஆளொருவர், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது ஐந்து ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

13. (1) ஆளொருவர் அல்லது உருவகத்திற்குச் சொந்தமான சொத்துக்கள், அத்தகைய ஆள் அல்லது உருவகம் பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவர் அல்லது உருவகத்தைப் போன்ற அதே ஒத்த அடையாளத்தைக் கொண்டிருக்கின்ற நிகழ்வு காரணமாக முடக்கப்படுகின்றவிடத்து, எவரேனும் அக்கறை கொண்டுள்ள திறத்தவர், பாதிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகம் பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவர் அல்லது உருவகம் என சரிபார்ப்பதற்கு தகுதி வாய்ந்த அதிகாரிக்கு கோரிக்கையொன்றைச் சமர்ப்பிக்கலாம்.

(2) கோரிக்கை பெறப்பட்டதன்மேல், தகுதிவாய்ந்த அதிகாரி, எந்த இயற்கையான அல்லது சட்ட ஆள் அல்லது உருவகத்தின் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளதோ அந்த இயற்கையான அல்லது சட்ட ஆள் அல்லது உருவகத்தின் அடையாளமானது பெயர் குறிப்புச் செயல் ஒன்றில் அடையாளம் காணப்பட்ட ஆளொருவரின் அல்லது உருவகத்தின் அடையாளத்தை ஒத்திருக்கின்றதா என்பதைச் செவ்வைபார்த்து இயன்றளவு வரை சுருக்கமாக அக்கறைகொண்டுள்ள திறத்தவரின் உரிமைக் கோரிக்கைக்கான ஏதுக்களை சரிபார்த்தல் வேண்டும்.

(3) பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவர் அல்லது உருவகத்தின் அடையாளத்துடனான பாதிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகத்தின் பொருந்துகை பொய்யானது என நிச்சயிக்கப்பட்டுள்ளதன்மேல், தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய நிகழ்வை 9 ஆம் ஒழுங்குவிதிக்கு இணங்கியொழுக சொத்துக்களை முடக்கிய ஆளுக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தலின்மேல், அத்தகைய ஆள், 9 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எடுத்த முடக்குதல் வழிமுறைகளை உடனடியாக மீளப்பெறுதலும் வேண்டும்.

## **பாகம்** IV

### அறிக்கையிடுவதற்கான கடப்பாடுகள்

14. (1) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் ஏதேனும் நிறுவனம் எவரேனும் பெயர் குறிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகம் தொடர்பாக-

(அ) அவர் ஏலவேயுள்ள எந்த வாடிக்கையாளருடன் அல்லது வாடிக்கையாளருடன் அல்லது வேறெவரேனுமாளுடன் அல்லது உருவகத்துடன் தொழில் புரிந்துள்ளாரோ அந்த ஏலவேயுள்ள வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளர் அல்லது வேறெவரேனுமாள் அல்லது உருவகம் அல்லது அவர் அறிந்துள்ள வேறெவரேனுமாள் அல்லது உருவகம் ஒரு பெயர் குறிக்கப்பட்ட ஆளாகவுள்ளார் அல்லது உருவகமாகவுள்ளது அல்லது ஒரு பெயர் குறிக்கப்பட்ட ஆளின் அல்லது உருவகத்தின் சார்பில் செயலாற்றுகின்ற ஆளாகவுள்ளார் அல்லது உருவகமாகவுள்ளது என அவர் அறிந்திருப்பின் அல்லது சந்தேகிப்பின் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு, நிதிசார் உளவறிதற் கூறுக்கு மற்றும் நிறுவனங்களின் மேற்பார்வை அதிகாரிகளுக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) பின்வருவன பற்றிய தகவலை, தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் நிதிசார் உளவறிதற் கூறுக்கும் வழங்குதல் வேண்டும் :-

(i) நிதிகளின் நிலைமை, 9 ஆம் ஒழுங்குவிதியின் கீழான முடக்கல் மற்றும் நிதிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட வேறு எவையேனும் வழக்குகள் ;

(ii) பெயர் குறிக்கப்பட்ட ஆளுக்காக அல்லது உருவகத்துக்காக இயைபான நிறுவனத்தினால் வைத்திருக்கப்பட்ட எவையேனும் நிதிகளின் அல்லது வேறு சொத்துக்களின் தன்மை, தொகை அல்லது அளவு அல்லது பெயர் குறிக்கப்பட்ட ஆளுக்காக அல்லது உருவகத்துக்காக ஆளொருவரினால் நிறைவேற்றப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் ;

(iii) ஒரு பெயர் குறிக்கப்பட்ட ஆளினாலான அல்லது உருவகத்தினாலான அல்லது அவர் சார்பிலான அல்லது அது சார்பிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் ;

(iv) முடக்கப்பட்ட நிதிகள் அல்லது வேறு சொத்துக்கள் தொடர்பிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் ; அத்துடன்

(v) இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதனை வசதிப்படுத்தும் வேறேதேனும் தகவல்.

(இ) இத்தகவலின் ஏதேனும் சரிபார்த்தலில், விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரியுடன் அல்லது நிதிசார் உளவறிதற் கூறுடன் ஒத்துழைத்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிக்கிணங்க வழங்கப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் தகவல், அது எந்த நோக்கங்களுக்காக வழங்கப்பட்டதோ அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதிக்கிணங்கத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் தகவல், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறு வகையாக விதிக்கப்பட்ட ஏதேனும் மட்டுப்பாட்டின் மீறுகையாகக் கொள்ளப்படுதலாகாது.

(3) (அ) பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவரின் அல்லது உருவகத்தின் சார்பில் அல்லது பணிப்பின் பேரில் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றது அல்லது சொந்தமாக வைத்திருக்கப்படக்கூடியது, கட்டுப்படுத்தப்படுகின்றது அல்லது கட்டுப்படுத்தப்படக்கூடியது அல்லது வைத்திருக்கப்படுகின்றது அல்லது வைத்திருக்கப்படக்கூடியது என அவர் அல்லது அவள் சந்தேகிக்கின்ற சொத்தொன்றை வைத்திருக்கின்ற ஆளொருவர், அச்சந்தேகத்தை சரிபார்ப்பதற்கு நிதிசார் உளவறிதற் கூறுக்கு பிரதியொன்றுடன் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு எழுத்தில் கோரிக்கையொன்றைச் செய்யலாம்.

(ஆ) கோரிக்கையானது, கோரிக்கையைச் செய்யும் ஆள் அறிந்தவாறாக சொத்து மற்றும் சொத்தின் சொந்தக்காரர் அல்லது கட்டுப்பாட்டாளரின் தகவல்களுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(இ) தகுதிவாய்ந்த அதிகாரி, (அ) என்னும் பந்தியின் கீழ் கோரிக்கையொன்றைச் செய்துள்ள ஆளுக்கு உதவுவதற்கு அவரது இயன்றவரையிலான முயற்சிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(ஈ) (அ) என்னும் பந்தியின் கீழ் கோரிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் நியாயமான முறையில் செயல்முறைக்கு உகந்தவாறு விரைவாக, தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது நிதிசார் உளவறிதற்கூறு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு எழுத்தில் பதிலளித்தல் வேண்டும் :-

(i) ஆதனமானது பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவரினால் அல்லது உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றது அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றது என்ற சாத்தியமுள்ளமை ;

(ii) ஆதனமானது, பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவரினால் அல்லது உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றது அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றது என்ற சாத்தியமில்லாமை ; அல்லது

(iii) ஆதனமானது பெயர் குறிக்கப்பட்ட ஆளொருவரினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றதா அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றதா என்பதை அறியாமை.

## பாகம் V

### அதிகாரவளிப்புகள்

15. (1) தகுதிவாய்ந்த அதிகாரி, பின்வருவனவற்றை எதிர்கொள்வதற்கு அவசியமென கருதுகின்றவாறாக முடக்கப்பட்ட நிதிகள் அல்லது வேறு சொத்துக்களைப் பயன்படுத்துவதை அனுமதிப்பதற்கு குறிப்பிட்ட அதிகாரவளிப்பை வழங்கலாம்.

(அ) அடிப்படைச் செலவு ஒன்று ;

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் நிதிகள் அல்லது வேறு சொத்துக்கள் முடக்கப்பட்டதானதாகிய திகதிக்கு முன்னர் எழுந்த ஒப்பந்தம்சார் கடப்பாடு ஒன்று ;

(இ) அதிவிசேட செலவு ஒன்று ; அல்லது

(ஈ) ஆளின் அல்லது உருவகத்தின் பெயர் குறிப்புக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட ஒரு நீதிமுறைசார், நிருவாகம்சார் அல்லது நடுத்தீர்ப்புசார் சோந்தை ஒன்று அல்லது தீர்ப்பு ஒன்று, அத்துடன் அச்சொத்து அச்சோந்தையை அல்லது தீர்ப்பை திருப்தி செய்வதற்கு அவசியமாகும்.

(2) இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக–

"அடிப்படைச் செலவு" என்பது, பின்வரும் நோக்கங்களுள் எவற்றுக்கும் அவசியமான முறையில் உறப்பட்ட செலவு ஒன்று எனப் பொருள்படும் :-

(அ) உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல் ;

(ஆ) வாடகை அல்லது ஈடுசெலுத்துதல் ;

(இ) மருந்து அல்லது மருத்துவச் சிகிச்சை பெறுதல் ;

(ஈ) வரிகளைச் செலுத்துதல் ;

(உ) காப்புறுதிக் கட்டுப்பணங்களைச் செலுத்துதல் ;

(ஊ) பயன்பாட்டு விதிப்பனவுகளைச் செலுத்துதல் ;

(எ) நியாயமான உயர்தொழில்சார் கட்டணங்களைச் செலுத்துதல் ;

(ஏ) சட்டச் சேவைகளை வழங்குதலுடன் இணைந்த நியாயமான செலவுகளைச் செலுத்துதல் ;

(ஐ) முடக்கப்பட்ட சொத்தொன்றை வழக்கமுறையாக வைத்திருப்பதற்காக அல்லது பேணுவதற்காக ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கிணங்கவுள்ள கட்டணங்கள் அல்லது சேவை விதிப்பனவுகளைச் செலுத்துதல் ;

(ஒ) வேறு ஏதேனும் ஒத்த நோக்கம்.

"அதிவிசேட செலவு" என்பது, தகுதிவாய்ந்த அதிகாரி :

(அ) அவசியமானதாகவும் ; அத்துடன்

(ஆ) ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையின் 2231 (2015) என்ற தீர்மானத்தின் அல்லது அது தொடர்பான ஏதேனும் அடுத்துப்பின்னரான தீர்மானத்தின் தேவைப்பாடுகளை மீறாததாகவும் உள்ள,

அடிப்படைச் செலவு ஒன்று அல்லது ஒப்பந்தம்சார் கடப்பாடு ஒன்று அல்லாத ஏதேனும் கொடுப்பனவு எனப் பொருள்படும்.

16. (1) ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையினால் அல்லது ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையின் 2231 (2015) என்ற தீர்மானத்தைப் பின்பற்றி அல்லது அது தொடர்பான ஏதேனும் அடுத்துப்பின்னரான தீர்மானத்தைப் பின்பற்றி தாபிக்கப்பட்ட குழுக்களுள் எவற்றினாலும் பெயர் குறிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் உருவகங்கள் தொடர்பில், தகுதிவாய்ந்த அதிகாரி, தடையொன்றை மீறும் வழக்கானது–

(அ) கூட்டான எல்லாமடங்கிய நடவடிக்கைத் திட்டத்தின் III ஆம் பின்னிணைப்பில் விவரிக்கப்பட்ட குடியியல் அணு ஒத்துழைப்பு கருத்திட்டமொன்றிற்கு அவசியமானதாகவிருப்பின் ; அல்லது

(ஆ) கூட்டான எல்லாமடங்கிய நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் செயற்பாட்டிற்கு அவசியமானதாகவிருப்பின்,

அதிகாரமளிப்பொன்றையும் வழங்கலாம்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, அதிகாரவளிப்பொன்றை வழங்குவதற்கு முன்னர்–

(அ) அத்தகைய அதிகாரவளிப்பு, ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையின் 2231 (2015) என்ற தீர்மானத்தின் அல்லது அது தொடர்பான ஏதேனும் அடுத்துப்பின்னரான தீர்மானத்தின் ஏற்பாடொன்றின் மீறுகையொன்றாக அமைகின்றதா எனக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும் ;

(ஆ) ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையினால் அல்லது ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையின் 2231 (2015) என்ற தீர்மானத்தை அல்லது அது தொடர்பான ஏதேனும் அடுத்துப்பின்னரான தீர்மானத்தைப் பின்பற்றி தாபிக்கப்பட்ட அதன் குழுக்களினால் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் அங்கீகாரங்களை நாடுதல் வேண்டும் என்பதுடன் அவற்றுக்குத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் அறிவிப்புகளைச் செய்தலும் வேண்டும் ; அத்துடன்

(இ) அதிகாரவளிப்புக்கு இயைபான வெளிநாட்டு அரசாங்கமொன்றிலிருந்தான ஏதேனும் தொடர்பாடலை கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரவளிப்பொன்றின்மீது எவையேனும் நிபந்தனைகளை விதிக்கலாம்.

17. இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரவளிப்பொன்றிற்காக எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று நியாயமான காலத்தினுள் தகுதிவாய்ந்த அதிகாரியினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பின்வருவனவற்றைச் செய்வதற்கு எழுத்தில் விண்ணப்பதாரருக்குப் பதிலளித்தலும் வேண்டும் :

(அ) அதிகாரவளிப்புடன் இணைக்கப்பட்ட எவையேனும் நிபந்தனைகள் உள்ளடங்கலாக அதிகாரவளிப்பை வழங்கல் ; அல்லது

(ஆ) அதிகாரவளிப்பை வழங்க மறுத்தல்.

## பாகம் VI

### நானாவிதமானவை

18. தகுதிவாய்ந்த அதிகாரி, நிதிசார் உளவறிதற் கூறு மற்றும் அமைச்சர், இவ்வொழுங்குவிதிகளின் கீழான கடப்பாடொன்றின் மீறுகைக்கு அல்லது நிகழ்தகு மீறுகைக்கு இயைபான ஏதேனும் கருமத்தை அல்லது தகவலைத் தோதான சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளுக்கும் நிறுவனங்களின் விடயத்தில், அவ் அவற்றின் நிறுவனங்களின் மேற்பார்வை அதிகாரிகளுக்கும், நிருவாகத் தடைவிதிப்புகள் விதிக்கப்பட வேண்டுமா அல்லவாவென்பதைக் கவனத்துட்கொள்வதற்காக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

19. தகுதிவாய்ந்த அதிகாரி, சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளையும், நிதிசார் உளவறிதற் கூறையும் நிறுவனங்களின் மேற்பார்வை அதிகாரிகளையும் மற்றும் வேறு தோதான முகவராண்மைகளையும் கலந்தாலோசித்தல் வேண்டுமென்பதுடன் இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதலைக் கண்காணிப்பதற்காகவும் அவற்றுடன் தொடர்புபட்ட தடைவிதிப்புகளை வலுவுறுத்துவதற்காவும் அமுலாக்கப்பட வேண்டிய ஒரு திட்டத்தை அபிவிருத்தி செய்தலும் வேண்டும்.

20. தகுதிவாய்ந்த அதிகாரி மற்றும் நிதிசார் உளவறிதற் கூறு இவ்வொழுங்குவிதிகளின் கீழான செயல்முறைகளை அமுலாக்குவதற்காகவும் கடப்பாடுகளை வலுவுறுத்துவதற்காகவும் பணிப்புரைகளை வழங்கலாம்.

21. தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதில் எவரேனுமாளை அல்லது அரசாங்க நிறுவனத்தைக் கலந்தாலோசித்து, அவரிடமிருந்து அல்லது அதனிடமிருந்து தகவலைப் பரிந்து கேட்கலாம்.

22. ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட எதற்கும் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்புக்கு அமைந்தவராதல் ஆகாது.

## பாகம் VII

### வரைவிலக்கணங்கள்

23. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

“கட்டுப்பாடு” என்பது, நிதிசார் அல்லது தொழிற்பாட்டு கொள்கைகள் பற்றிய முடிவுகள் மீது செல்வாக்கு, அதிகாரம் அல்லது தத்துவத்தைச் செலுத்துதல் எனப் பொருள்படும் என்பதுடன் சட்ட அல்லது ஒப்புறவான வலுவைக் கொண்டிருப்பதாயினும் சரி அல்லாதாயினும் சரி மற்றும் சட்ட அல்லது ஒப்புறவான உரிமைகளை அடிப்படையாகக் கொண்டதாயினும் சரி அல்லதாயினும் சரி நம்பிக்கைப் பொறுப்புக்கள், உடன்படிக்கைகள், ஒழுங்கேற்பாடுகள், புரிந்துணர்வுகள் அல்லது செயல்முறைகளின் விளைவான அல்லது அவற்றின் மூலமான கட்டுப்படுத்துகையையும் உள்ளடக்கும் ; “கட்டுப்படுத்தப்பட்ட” என்பது, நேரொத்த பொருளை உடையதாகும் ;

"கையாளுகை" என்பது, விற்பனை, வழங்குகை, குத்தகை இடமாற்றுகை, மாற்றுகை கையுதிர்ப்பு, அசைவு அல்லது பயன்பாடு என்பவற்றை உள்ளடக்குகின்றது என்பதுடன் "கையாளுதல்" மற்றும் "கையாண்ட" என்பவை அதே பொருளை உடையனவாதலும் வேண்டும் ;

"உருவகம்" என்பது. ஏதேனும் கூட்டிணைக்கப்படாத குழு, தொகுதி, கழகம், ஒழுங்கமைப்பு, நிறுவனம் அல்லது ஒழுங்கேற்பாடு எனப் பொருள்படும் ;

"நிதிசார் உளவறிதற் கூறு" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற்கூறு எனப் பொருள்படும் ;

"நிதிசார் சேவைகள்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கருத்தினுள் "நிதித்தொழில்" ஒன்றை அமைத்துருவாக்குகின்ற ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுதல் எனப் பொருள்படும் ;

"நிதிகள் அல்லது வேறு சொத்துக்கள்" என்பது, வங்கிக் கடன்கள், பயணிகளின் காசோலைகள், வங்கிக் காசோலைகள், பணக் கட்டளைகள், பங்குகள், பிணையங்கள், முறிகள், வரைவுகள் அல்லது கடன்பத்திரங்கள் மற்றும் அத்தகைய நிதிகள் அல்லது சொத்துக்களிலிருந்து திரளுகின்ற அல்லது அவற்றினால் தோற்றுவிக்கப்பட்ட ஏதேனும் வட்டி, பங்கிலாபங்கள் அல்லது வேறு வருமானம் அல்லது பெறுமதி அத்துடன் நிதிகள், பண்டங்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயல்திறனான முறையில் பயன்படுத்தக்கூடியவையுமான எவையேனும் வேறு சொத்துக்கள் உள்ளடங்கலாக, ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் அத்தகைய நிதிகள் அல்லது வேறு சொத்துக்களுக்கான உரித்தை அல்லது அவற்றிலான அக்கறையைச் சான்றுப்படுத்துகின்ற, இலத்திரனியல் அல்லது எண்ணியலுட்பட்ட எவ்வாறாயினும் கொள்ளப்பட்ட உருவ அல்லது அருவ, அசைவுள்ள அல்லது அசைவற்ற நிதிசார் சொத்துக்கள் (எண்ணெய் மற்றும் வேறு இயற்கை வளங்கள் உட்பட) பொருளாதார வளங்கள் ஒவ்வொரு வகையினவையுமான ஆதனம் மற்றும் எவ்வடிவத்திலுமான சட்ட ஆவணங்கள் அல்லது சாதனங்கள் உள்ளடங்கலாக ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் எவையேனும் சொத்துக்கள் எனப் பொருள்படும் ;

"முடக்கப்பட்ட சொத்து" என்பது, இவ்வொழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்டவொரு தடை காரணமாகக் கையாளப்பட முடியாதவொரு சொத்து எனப் பொருள்படும் ;

"நிறுவனம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"கூட்டான எல்லாமடங்கிய நடவடிக்கைத் திட்டம் (கூ.எ.ந.தி)" என்பது, (ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்புப் பேரவையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் - சீனா, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள் அத்துடன் ஜேர்மனி) P5+1 ஆகிய ஈரானுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதியன்று வியன்னாவில் செய்துகொள்ளப்பட்ட ஈரானின் அணு நிகழ்ச்சித்திட்டம் பற்றிய உடன்படிக்கை எனப் பொருள்படும் ;

"அமைச்சர்" என்பது, வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும் ;

"சொந்தமாக வைத்திருத்தல்" என்பது, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் அல்லது உருவகத்தின் இருபத்தைந்து சதவீதத்திற்கான அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்திற்கான சட்ட உரித்துடைமையை ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கொண்டிருத்தல் எனப் பொருள்படும் என்பதுடன் "சொந்தமாக வைத்திருக்கப்பட்ட", "சொத்தாண்மை" மற்றும் "சொந்தமாக வைத்திருத்தல்" என்பவை நேரொத்த பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"ஆள்" என்பது, (2 ஆம் அத்தியாயமான) பொருள்கோடற் கட்டளைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8-99

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.